**Minutes of the Public Hearing Meeting held on 30.05.2023 at 11.00 A.M. in K.V.Mahal, Sathiyamangalam Village, Kulathur Taluk, Pudukottai District to establish M/s. Thiru. C. Rengaraj Rough Stone Quarry with an extent of 1.34.0 Ha at S.F.No. 217/3A, 217/20, 217/21, 217/22 & 217/24, Sathiyamangalam Village, Kulathur Taluk, Pudukkottai District**

**Name of the Project:**

M/s. Thiru. C. Rengaraj Rough Stone Quarry with an extent of 1.34.0 Hec. at S.F.No. 217/3A, 217/20, 217/21, 217/22 & 217/24, Sathiyamangalam Village, Kulathur Taluk, Pudukkottai District.

**List of Officials participated in the meeting:**

1. Thiru. H. M. Kulanthaisamy,
   Revenue Divisional Officer,
   Illuppur.

2. Thiru. K. Selvakumar, M.E.,
   District Environmental Engineer,
   Tamilnadu Pollution Control Board,
   Pudukkottai District.

3. Thiru. S. Sakthivelu,
   Tahshildar,
   Kulathur Taluk.

4. Tmt. S. Meiyarivu,
   Revenue Inspector,
   Kulathur.

5. Thiru. M. Venkatesh,
   Village Administrative Officer
   Lembalakudi.

6. Thiru. T. Karthick,
   Police Constable,
   Vellanur Police Station,
   Vellanur.

7. Tmt. R. Dharani,
   Assistant Engineer,
   Tamilnadu Pollution Control Board,
   Pudukkottai District.

8. Thiru. M. Venkada Subramanian,
   Assistant Engineer,
   Tamilnadu Pollution Control Board,
   Pudukkottai District.

**<u>List of Participants related to the project:</u>**

1. Thiru. Shaik Nawas,
   Technical Manager,
   Geo Exploration and Mining Solution,
   Salem.

In the public hearing, 66 persons were participated, including Government Officers, Project proponents and the general public. (Enclosed video Annexure-A).

**<u>Welcome note given by District Environmental Engineer:</u>**

The District Environmental Engineer, Tamil Nadu, Pollution Control Board, Pudukkottai District has welcomed the Revenue Divisional Officer, Illuppur who presided over the function. He welcomed the revenue officials and other Government Officials. He also welcomed Proprietor of M/s. Thiru. C. Rengaraj Rough Stone Quarry, Project Proponent, Press and general public who were attended the Public Hearing meeting.

He also informed that as per Ministry of Environment & Forest, New Delhi vide EIA Notification dated 14.09.2006, certain type of projects, public

opinion has to be obtained before the issue of Environment Clearance. He added that the public notice informing the conducting of public hearing was published in Dhinakaran & The New Indian Express on 19.04.2023. This public hearing was conducted for M/s. M/s. Thiru. C. Rengaraj Rough Stone Quarry with an extent of 1.34.0 Hect at S.F.No. 217/3A, 217/20, 217/21, 217/22 & 217/24, Sathiyamangalam Village, Kulathur Taluk, Pudukkottai District to obtain the views of public.

He also informed that the views of public would be recorded and it would be forwarded to the State Environment Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector, Pudukkottai.

District Environmental Engineer informed that M/s. Thiru. C. Rengaraj Rough Stone Quarry official would explain about the project after that the public could give their opinion about the project.

**Revenue Divisional Officer , Illuppur**

He welcomed the gathering and informed that the Project Proponent would explain about their proposed project outlay and Environmental Impact Assessment study carried out through Power Point Presentation.

**Power Point Presentation by the Project Proponent:**

Thiru. Shaik Nawas, Technical Manager, Geo Exploration and Mining Solution, Salem of M/s. Thiru. C. Rengaraj Rough Stone Quarry has explained about the details of the project outlay, Environmental Impact Assessment report and Environmental Management Plan through Power Point Presentation.(Copy of the detail is enclosed in Annexure -B)

**District Environmental Engineer:**

The District Environmental Engineer advised the public to register their views on this project either verbally or in writing by giving their name and village details.

Followed by this, Public Hearing process started.

1. <u>Thiru. N. Balu, Sathiyamangalam</u>

He welcomed the Revenue Divisional officer, Illupur and Tahsildar, Kulathur who are presiding over the public hearing meeting regarding this quarry. He stated that the revenue of a panchayat is mainly depends upon the industrial estates, educational institutions and mineral resources located in the panchayat premises. He stated that these minerals are quarried as per the Government Acts and Rules, it will contribute main revenue to the village panchayat. He added that revenue from the quarry will play a major role for the development of the panchayat. Further he stated that as this quarry operation it does not affect anyone. If permission shall be granted for this quarry as per the Government Acts and Rules so that Sathiyamangalam panchayat will get revenue from this stone quarry and its revenue will be great help to the public welfare schemes of the panchayat. He expressed his support for the project saying that permission shall be given to the stone quarry with in the purview of Government norms.

2. <u>Thiru. Udaiyappan, Village President, Melur</u>

He expressed his support for this project saying that the people in our village are suffering without income and if this quarry is established, they will get income for the life and their difficulties will be removed and also the panchayat will get more income.

3. <u>Thiru. C.R.P. Manivannan, Melur</u>

He expressed his support for this project by saying that this quarry will be very useful for this village and if there is no quarry, there is no bus facility for people to go out to work and there is no water facility, so this quarry is needed for the welfare of the people.

4. <u>Thiru. M. Murugesan, Udaiyyandipatti</u>

He welcomed all the revenue officers who are presided over the function and he stated that it is very necessary to have this stone quarry in this village because more than fifty people are likely to get work in this quarry and revenue of sathiyamangalam village will increase through this stone quarry. Therefore, he expressed his support for this project.

**5. Tmt. Rajeshwari Ravichandran, Sathiyamangalam**

She expressed her support for the project saying that if the stone quarry is established in her village, the income from the quarry will be very helpful to the people and they will get more employment opportunities.

**6. Thiru. K. Shivanraj, Udaiyandippatti**

He expressed his support for the project by saying that 50 people will get jobs through this Rengaraj Rough Stone Quarry. Further he added that the revenue of the panchayat will be increased and also this stone quarry creating a way for the people to earn income.

**7. Thiru, T.M.S. Theethappan, Melur**

He thanked the Pollution Control Board Officers, the Revenue Divisional Officer and others for those who are presiding over this meeting. He stated that the establishment of a quarry would bring a good revenue to the village panchayat and the quarry owner is good being to know the needs of a village and meet the needs of the panchayat. Further he added that this is a very good project. He expressed his support for this project by saying that there is no objection on behalf of the public for establishment of this stone quarry.

**8. Tmt. Swetha Muthukumar, Sathiyamangalam**

She has informed that at present she is suffering without income and it is difficult to go to work and monthly income of her family is very low. She expressed her support for the project saying that if this stone quarry is established it will be very useful for their livelihood in future.

**Vote of Thanks:**

The District Environmental Engineer has informed that the public could submit their comments in writing at the office of the District Collector or the Tamil Nadu Pollution Control Board, Pudukkottai office. The District Environmental Engineer thanked the Revenue Divisional Officer, Illuppur for presiding over the

Public hearing meeting and the other Government Officials for attending the meeting. The Proprietor of the stone quarry, Workers, Project Proponent, NGOs, Press reporters, Police officials and general public who were participated in the Public Hearing Meeting.

The meeting came to an end

Encl.:

1. Attendance sheet of the participants(A)

2. Project Proponent's power point presentation(B)

3. Video(CD) of the Public Hearing (C)

4. Draft of Environmental Impact Assessment Report and Executive Summary in Tamil and English (D)

31/5/23

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Pudukkottai.**

31.05.23

**Revenue Divisional Officer,**
**Illuppur.**

**புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம் கிராமம், K.V மஹாலில் 30.05.2023 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற தி/ள். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி, விஸ்தீரணம்-1.34.0 ஹெக்டேர், புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.**

**திட்டத்தின் பெயர் :**

தி/ள். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி , விஸ்தீரணம் - 1.34.0 ஹெக்டேர், புல எண். 217/3A, 217/20, 217/21, 217/22 & 217/24 சத்தியமங்கலம் கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

**கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள் :**

1. திரு. ஹை. மை. குழந்தைசாமி,
   வருவாய் கோட்டாட்சியர்,
   இலுப்பூர் கோட்டம்.

2. திரு. கு. செல்வகுமார்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

3. திரு. சு. சக்திவேலு,
   வருவாய் வட்டாட்சியர்,
   குளத்தூர் வட்டம்.

4. திருமதி. ச. மெய்யறிவு,
   வருவாய் ஆய்வாளர்,
   குளத்தூர்.

5. திரு. ம. வெங்கடேஷ்,
   கிராம நிர்வாக அலுவலர்,
   சத்தியமங்கலம்.

6. திரு. T. கார்த்திக்,
காவலர்,
வெள்ளனூர் காவல் நிலையம்,
வெள்ளனூர்.

7. திருமதி. இரா. தாரணி,
உதவி பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

8. திரு. மு. வெங்கடசுப்ரமணியன்,
உதவி பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :**

1. திரு. சைக் நவாஸ்,
தொழில்நுட்ப மேலாளர்,
ஜியோ எக்ஸ்புளோரேஷன் & மைனிங் சொல்யூசன்,
சேலம்.

**அரசு அலுவலர்கள், திட்ட முனைவோர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்தம் 66 நபர்கள் பங்கேற்றனர்.** (இணைப்பு – 'அ' வாயிலாக பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கீழ்க்கண்டவாறு வரவேற்புரை ஆற்றினார்கள்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகைபுரிந்து தலைமை தாங்க வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் மற்றும் இக்கூட்டத்தில் பங்குபெற்ற வருவாய் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள், காவல்துறை அதிகாரிகள், தி/ள். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி நிறுவன உரிமையாளர், பிரதிநிதிகள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

5

பின்னர், மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, சிலவகைத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவது அவசியமாகிறது. இது தொடர்பாக தினகரன் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் 19.04.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் தி/எ். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி நிறுவனத்தால் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம் கிராமம், புல எண். 217/3A, 217/20, 217/21, 217/22 & 217/24 ஆகியவற்றில் 1.34.0 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக இக்கூட்டம் நடத்தப்படுகிறது என தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்குப்பின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/எ். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்தபின், பொதுமக்கள் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கூறினார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்**

கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்து இத்திட்டப் பிரதிநிதிகளைத் திட்டம் குறித்து விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திட்டப் பிரதிநிதி:**

திரு. சைக் நவாஸ், தொழில்நுட்ப மேலாளர், ஜியோ எக்ஸ்புளோரேஷன் & மைனிங் சொல்யூசன், சேலம் அவர்கள் தி/எ். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி சார்பாக இத்திட்டம் குறித்தான விவரங்கள் வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் விரிவாக எடுத்துரைத்தார். இதன் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 'ஆ')

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் விபரம் சொல்லி தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துவடிவிலோ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**பொதுமக்கள் கருத்து கேட்பு:**

1. **திரு. N. பாலு, சத்தியமங்கலம்**

இந்த இனிய காலை நேரத்திலே குவாரி சம்பந்தமாக கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கும் மதிப்பிற்குரிய கோட்டாட்சியர் அவர்களுக்கும் வட்டாட்சியர் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, ஒரு ஊராட்சியின் வருமானம் என்பது அந்த ஊராட்சியை சுற்றி உள்ள தொழிற்பேட்டைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சியில் அமைந்துள்ள கனிம வளங்களே என்று தெரிவித்தார். அந்த கனிம வளங்களை அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு குவாரி அமைத்தால் அது அந்த ஊராட்சியின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருக்கும் என்று தெரிவித்தார். இந்தக் குவாரியினால் யாருக்கும் எவ்வித பாதிக்கும் இல்லை என்பதால் அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இந்த குவாரிக்கு அனுமதி அளிப்பதன் மூலம் சத்தியமங்கலம் ஊராட்சிக்கு வருவாய் கிடைக்கும் எனவும் அந்த வருவாய் ஊராட்சி நலத்திட்டங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்தார். அரசு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இந்த கல்குவாரி அமைவதற்கு அனுமதி வழங்கலாம் என்று கேட்டுக்கொள்வதாக தெரிவித்து தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

2. **திரு. உடையப்பன், ஊராட்சி மன்றத் தலைவர், மேலூர்**

எங்களது கிராமத்தில் இருக்கும் மக்கள் வருமானம் இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் இந்தக் கல்குவாரி அமைந்தால் அந்தக் கஷ்டங்கள் நீங்கிவிடும் என்றும் ஊராட்சிக்கு வருமானம் கிடைக்கும் என்று கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

3. **திரு. C. R. P. மணிவண்ணன், மேலூர்**

இந்தக் குவாரி வருவதனால் இந்த கிராமத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த குவாரி இல்லை என்றால் மக்கள் வெளியே வேலைக்கு செல்வதற்கு பஸ் வசதி எதுவும் இல்லை என்றும் தண்ணீர் வசதி இல்லை என்று குறிப்பிட்டார். அதனால் மக்கள் நலனுக்காக இந்த கல்குவாரி இந்த கிராமத்தில் அமைய வேண்டும் என்று கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

4. திரு. M. முருகேசன், உடையாண்டிப்பட்டி

இங்கு வந்திருக்கும் வருவாய் அதிகாரிகள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இந்த கிராமத்தில் இந்த கல்குவாரி அமைய வேண்டியது மிக மிக அவசியமாகும். இந்த கல்குவாரியில் ஐம்பது பேருக்கு மேல் வேலை செய்ய வாய்ப்புள்ளதாகவும், இந்த குவாரியின் மூலம் சத்தியமங்கலம் கிராமத்திற்கு வருவாய் அதிகரிக்கும் என்றும் அதனால் இந்த கல்குவாரி அமைய வேண்டும் என்று இத்திட்டத்திற்கு தனது ஆதரவு தெரிவித்தார்.

5. திருமதி. இராஜேஸ்வரி ரவிச்சந்திரன், சத்தியமங்கலம்

இந்த கல்குவாரி ஆரம்பிப்பதால் மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம் கிடைக்கும் மக்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்று இத்திட்டத்திற்கு தனது ஆதரவு தெரிவித்தார்.

6. திரு. K. சிவன்ராஜ், உடையாண்டிப்பட்டி

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம் கிராமத்தில் அமைய இருக்கும் ரெங்கராஜ் கல்குவாரியின் மூலம் 50 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் பஞ்சாயத்துக்கு வருமானம் அதிகரிக்கும் என்று தெரிவித்தார். மேலும், பொது மக்களின் வருவாய் ஈட்டுவதற்கு வழி ஏற்படுத்தி இந்நிறுவனம் செயல்படுவதாக கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவு தெரிவித்தார்.

7. திரு. T. M. S. தீத்தப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், மேலூர்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுக்கும் மற்றும் வருவாய் வட்டாட்சியர், இந்த கூட்டத்தினை தலைமையேற்று நடத்த வந்திருக்கும் கோட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு, இந்த கல்குவாரி அமைவதனால் ஊராட்சிக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்தார். மேலும் இந்த குவாரி உரிமையாளர்கள் ஓர் ஊரின் தேவை மற்றும் ஊராட்சியின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யும் அளவிற்கு நற்குணம் படைத்தவர்கள் என்று குறிப்பிட்டார். இது மிகவும் நல்ல திட்டம், இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் பொதுமக்கள் சார்பாக எந்த ஆட்சேபனையும் கிடையாது என்று கூறி கல்குவாரி அமைய இருக்கும் இத்திட்டத்திற்கு தனது ஆதரவு தெரிவித்தார்.

8. திருமதி. சுவேதா முத்துக்குமார், சத்தியமங்கலம்.

தற்பொழுது எங்களது வீட்டில் வருமானம் இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் வேலைக்கு போவதற்கு சிரமப்படுவதாகவும் வீட்டில் அனைவருக்கும் மாத வருமானம்

குறைவாக இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த குவாரி அமைந்தால் வருங்காலத்தில் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறி இந்த கல்குவாரி அமைவதற்கு தனது ஆதரவு தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவிலோ, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/ள். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறினார். தி/ள். திரு. C. ரெங்கராஜ் உடைக்கல் குவாரி நிறுவன உரிமையாளர், பிரதிநிதிகள், பணியாளர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).

31/5/23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

31.5.23

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்.